[10th February 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI A. A. RASHEED : Is it a fact that the police are more keen on making this city a puritan one by raiding Recreation clubs?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of the police or anybody else taking a 'puritan' attitude. There is the Gaming Act which prohibits playing cards with stakes. If some of the Recreation clubs indulge in playing cards with stakes, the police cannot help taking action.

SRI A. A. RASHEED : Why did the police pitch upon these two clubs in the city when there are so many clubs in the city which derive the income from the card game?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member can kindly give information as to the other clubs which indulge in such activities, I shall certainly take action.

Polytechnic School for Salem

* 18 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Polytechnic School in Salem; and

(*b*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes, Sir. Final decision will be taken shortly.

SRI M. P. SUBRAMANIAM : சேலத்தில் இந்த பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் அமைப்பதற்கு 1952-ல் இருந்து மூன்று வருடங்களாக, டோக்கனாக ப்ரொவிஷன் செய்திருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஏன்? சமீபத்தில் சேலத்தைச் சேர்ந்த ஒருவர் இதற்கென இரண்டரை லட்சம் ரூபாய் இனமாக கொடுக்க முன்வந்தும் அதைப் பயன்படுத்தாது இன்னும் கூடுதல் தொகை வேண்டும் என்று கூறி அதை ஒத்தி வைப்பதற்குக் காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே, தனிப் பட்டவர்கள் இந்த பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த வேண்டுமென்று முன் வந்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு மத்திய சர்க்காருக்கு அதை சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து முடிவு வந்தவுடன் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI T. SAMPATH : தஞ்சை ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் அமைப்பதற்காக தஞ்சை பிரமுகர் ஒருவர் இரண்டரை லட்சம் ரூபாய் நன்கொடையாக கொடுத்திருக்கிறார்களா? அப்படியிருந்தால் தஞ்சையில் ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

MR. SPEAKER : The hon. Member must put a separate question. This relates to Salem. How can he ask about Kumbakonam? (Laughter.) No member can ask about other places.

SRI T. KARIA GOUNDER : அதே கேள்வியை கேட்க உத்தேசித்திருந்தேன்.

10th February 1958]

MR. SPEAKER : அப்படியானால் கேட்கவேண்டாம். தயவு செய்து சேலத்தைப் பற்றி கேளுங்கள்.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட திட்டத்தின் விவரம் என்ன ? அதில், தனிப்பட்டவர் யார் ? எவ்வளவு தொகை கொடுக்க அவர் வாக்களித்திருக்கிறார்கள். அதில் அரசாங்கத்தின் பங்கீடு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கரிமுத்து தியாகராஜன் அவர்கள் சேலத்தில் இந்த பாலிடெக்னிக் ஏற்படுத்த முன் வந்திருக்கிறார்கள். அப்படி தனிப்பட்டவர்கள் ஏற்படுத்துவதில் எந்த விதத்தில் அரசாங்க உதவி செய்வது என்பதைப் பற்றி ஒரு கொள்கையை அனுசரித்து வருகிறார்கள். மத்திய அரசாங்கத்தில் இருந்து பாதி கொடுக்கிறார்கள். பாக்கி பாதியில் பாதி சென்னை அரசாங்கமும், பாதி தனிப்பட்டவர்களும் போட்டு நடத்தவேண்டியது. வருஷா வருஷம் ஆகவேண்டிய செலவைப்பற்றி இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் தனிப்பட்டவர்கள்தான் பூராச் செலவையும் போட்டு வரவேண்டும். அதைப் பற்றி முடிவாக ஒரு கொள்கையும் வரையறுக்கப்படவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : ஏற்கனவே இருக்கிற பாலிடெக்னிக் பள்ளிக்கூடம், திராவிட பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று இருந்தது. இப்பொழுது அதை தமிழ் நாடு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று மாற்றியிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோரும் தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்திற்காவது இருக்கட்டுமே என்று அப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

Madras Cultivating Tenants Protection Act

* 19 *Q*.—**SRI N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any landlords have been fined under the Madras Cultivating Tenants Protection (Amendment) Act, 1956, since the passing of the Act?

THE HON. SRI M. A. MANICKAVELU : If the member wants to know the number of landlords on whom a penalty was imposed for refusal to sign or for failure to lodge the lease deed in accordance with the provisions of section 4-B (1) of the Madras Cultivating Tenants Protection Act, 1955, the answer is ' nil '.

SRI N. K. PALANISAMI : மாகாணத்தின் பல பகுதிகளிலும் இம்மாதிரி பிரச்னைதான் இருக்கிறது. சட்டப்பிரகாரம் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய காலத்தில் எந்த மிராசுதாரும் கையெழுத்து போடுவதில்லை. ஆகவே, இம்மாகாணம் பூராவிலும் உடனடியாக, அப்படி கையெழுத்து போடச்செய்ய இந்தச் சட்டத்தை அதற்கு ஏற்றபடி இம்ப்ரூவ் செய்ய என்ன கஷ்டம் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : என்ன இம்ப்ரூவ் பண்ணுவது என்று தெரியவில்லை. எல்லோரும் கையெழுத்து போட்டு கொடுக்கிறார்கள். மூன்று எடுத்து ஒன்றை தான் வைத்துக்கொண்டு, ஒன்றை விவசாயினிடமும், இன்னொன்றை தாசில்தார் ஆபீஸிலும் கொடுக்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள் வேறு எதாவது சொன்னால் அதைப பற்றி கவனிக்கிறேன்.